## வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனி – 2016/2017

வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கம்பனியின் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் மீதான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்கின்ற கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி அத்திகதியிலுள்ளவாறு கம்பனியின் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மொத்த மீதி ரூபா 2,287.09 மில்லியனாவதுடன் அதில் 64 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,466.90 மில்லியன் மீதி வ/ப எவன்கார்ட் மெரிரைம் சர்விசஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தது. கம்பனிக்கு கிடைக்க வேண்டியுள்ள கடன் தொகையினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

அவ்வாறே நிதிக்கூற்றுக்களின் படி வ/ப எவன்கார்ட் மெரிரைம் சர்விசஸ் (தனியார்) கம்பனிக்குத் தீர்க்கப்பட வேண்டியுள்ள ரூபா 762.80 மில்லியன் கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி விடயங்களிற்கு மேலதிகமாக வ/ப எவன்கார்ட் மெரிரைம் சர்விசஸ் (தனியார்) கம்பனியினால் சிங்கப்பூர் சர்வதேச நடுவர்தீர்ப்பு மன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பிற்கு அமைய யூ.எஸ்.டொலர் 5,000,000 இனையும் சிங்கப்பூர் டொலர் 826,000 இனையும் இழப்பீடாக அக்கம்பனிக்குச் செலுத்துமாறு 2016 நவம்பர் 24 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 மார்ச் 31 இலிலுள்ளவாறு கம்பனிக்கு அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 426.02 மில்லியன் மற்றும் யூ.எஸ்.டொலர் 8,870,783 வியாபாரப் பெறவேண்டியவைகளில்

(Trade Receivables) கடன்பட்டோரால் முறையே ரூபா 15.75 மில்லியன் மற்றும் யூ.எஸ்.டொலர் 38,155 மீதிகள் மாத்திரமே உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய கடன்பட்டோர் மீதியிலுள்ள முறையே ரூபா 410.27 மில்லியன் மற்றும் யூ.எஸ்.டொலர் 8,832,628 மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 11 கடன்பட்டோரிடமிருந்து கிடைத்திருந்த மீதி உறுதிப்படுத்தல்கள், நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள தனிப்பட்டோர் கடன் மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை. கம்பனியின் தனிப்பட்டோர் கடன் கணக்குகளின் படி ரூபா 10.79 மில்லியன் மற்றும் யூ.எஸ்.டொலர் 10,524 மீதி பெறப்பட வேண்டியிருந்த போதிலும், மீதி உறுதிப்படுத்தல்களின் படி அம்மீதி ரூபா 9.56 மில்லியனாக மாத்திரம் காணப்பட்டது.

(இ) ஏனைய பெறவேண்டியவைகளில் (Other Receivables) உள்ளடங்கியுள்ள ரூபா 377 மில்லியன் தொகையான காலி மிதக்கும் ஆயுதக் களஞ்சியம், ரூபா 83 மில்லியன் பெறுமதியான ஆகாய ஆயுதப் போக்குவரத்துச் செயற்திட்டம், ரூபா 9 மில்லியன் தொகையான பெறவேண்டிய ஊழியர் கடன் முற்பணங்கள் மற்றும் ரூபா 47.7 மில்லியன் தொகையான பிற பெறவேண்டிய மீதிகளிற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 மார்ச் 31 ஆந் திகதியிலுள்ளவாறான கம்பனியின் கடன்பட்டோர் பட்டோலையின் படி தரைப்பகுதிப் பிரிவின் கடன்பட்டோர் மீதியில் ரூபா 6.22 மில்லியன் மொத்தமான மறைப்பெறுமதி மீதியும் உள்ளடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. துரைப்பகுதிப் பிரிவின் ரூபா 3.02 மில்லியன் மற்றும் கடற்பகுதிப் பிரிவின் ரூபா 13.21 மில்லியன் கடன் மீதிகள் 5 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்தன.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 37 இன் படி, காலங்கடந்த கடன்பட்டோர் மீதிகளிற்காக போதியளவு நட்டக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கடற்பகுதிப் பிரிவின் மொத்தக் கடன்பட்டோரில் 79 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 1,085.57 மில்லியன் ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட மீதியாக காணப்பட்ட போதிலும், அது தொடர்பில் தேவையான நட்டக்கடன் ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 மார்ச் 31 இலுள்ளவாறு கம்பனிக்குச் சொந்தமான மிதக்கும் ஆயுதக் களஞ்சியம், வெளிநாட்டுத் துறைமுகங்களிலுள்ள இருப்புக்கள் மற்றும் பொலிஸ் ஆயுதக் கிடங்கிலுள்ள ஆயுத இருப்புக்கள் என்பன பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 ஆம் பிரிவின் படி, நிறுவகத்தின் ஊழியர் நலக் கடப்பாட்டினை கணிப்பீடு செய்கையில் ஆயுட்கால முறையினை பிரயோகித்து அதற்காக தற்போதைய ஊழியக் கிரயம், ஊழியர்களின் வயதெல்லை, ஊழியர்களின் ஆயுள் எதிர்பார்க்கை, ஊழியர் புரள்வுக்கான தாக்கம், ஓய்வுபெறல் வயது, கழிவீட்டு வீதம், சம்பள ஏற்ற சதவீதம் போன்ற எடுகோள்களை பிரயோகிக் முடியும். இருப்பினும், கம்பனி அதன் ஊழிய நலத்தினைக் கணிப்பீடு செய்கையில் மேற்படி ஆயுட்கால முறையினைப் பின்பற்றாதுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2016/2017 நிதியாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களின் படி பிற்போட்ட வரிப் பொறுப்பு ரூபா 6.29 மில்லியனானதுடன் கணக்காய்வின் கணிப்பீட்டின் படி பிற்போட்ட வரிப் பொறுப்பு ரூபா 10.33 மில்லியனாகும். அதற்கமைய, ஆண்டிற்கான இலாபமும் பொறுப்பும் ரூபா 16.62 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நிதிக்கூற்றுக்களின் படி கம்பனியின் தலைமை அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 739.46 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையும் இக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு

திட்டமிடப்பட்டிருந்த காணியின் உரித்தினை கம்பனிக்கு கையேற்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஒ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீருடைகள் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிக்கும் அத்திகதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்கெடுப்பின் படியான பெறுமதிக்கும் இடையே ரூபா 1.29 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய ரவை இருப்பை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கையில் கிரயம் மற்றும் தேறக்கூடிய நிகரப் பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், கிரயம் மற்றும் தேறக்கூடிய நிகரப் பெறுமதியினை பரிசோதிப்பதற்கு போதியளவு சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

-----------------------------------

இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமைந்த பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதற்கிணங்க கம்பனியின் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை.

### 2.1.1 ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

ஆ. எனது அபிப்பிராயமாவது:

- மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களிற்கு உட்பட்டு கணக்காய்வுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன் இது வரையான எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுகின்றவாறு கம்பனியினால் முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

**2.2 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் | |
| (i) கணக்கீட்டு நியம இல. 39 – 46 (பீ) பந்தி | முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்படுகின்ற முதலீடுகள் மற்றும் நிதிக்கருவிகள் காலத்தேய்மானம் செய்யப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் ரூபா 698.01 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்கள் அவற்றின் முகப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இல. 07 – 14 ஆம் பந்தி | பிணையாக வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் பெறுமதியும் அந்த பிணை தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்ப டுத்தப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக பிணையாக வைக்கப்பட்டுள்ள ரூபா 216.79 மில்லியன் நிலையான வைப்புக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | |
| i. 61(b)(ii) ஆம் பிரிவு | பங்கிலாப வரிப் பொறுப்புக் கணிப்பீடு மீதான அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 113 ஆம் பிரிவு | வருமான வரிக்கான சுய மதிப்பீட்டு வருமான வரிக் கொடுப்பனவு உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2016/2017 ஆம் வரி மதிப்பீட்டாண்டிற்காக எந்தவொரு சுய மதிப்பீட்டு வருமான வரிக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு | ஊழியர் ஒருவர் ஓய்வுபெற்ற திகதியிலிருந்து ஒரு மாத்திற்குள் பணிக்கொடைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் ஒரு மாதத்திற்குள் செலுத்தித் தீர்க்கப்படாத ரூபா 1.82 மில்லியன் பணிக்கொடைக் கொடுப்பனவு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. |

## 2.3 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களிலிருந்து கிடைத்த வட்டி வருமானத்தில் ரூபா 12.44 மில்லியன் தொகை தனிப்பட்ட பேரேட்டுக் கணக்கொன்றில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக பேணப்பட்டிருந்த வங்கிக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 23.81 மில்லியன் மீதியொன்று காணப்பட்டிருந்தமை வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த வங்கிக் கணக்கை பேணுவதற்கான நோக்கம் தெளிவுபடுத்தப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் ரூபா 48.61 மில்லியன் தேறிய இலாபமாகக் காணப்பட்டதுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபமான ரூபா 356.67 மில்லியனாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 308.06 மில்லியன் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு பின்வருவன பிரதானமாக பங்களித்திருந்தன.

| விபரம் | நிதியாண்டு 2016/ 2017 | 2015/ 2016 | வருமானம்/ செலவினம் (அதிகரிப்பு/ குறைவு) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | % |
| **வருமானம்** | | | | |
| தரைப்பகுதிப் பிரிவு | 637.67 | 996.58 | (358.91) | 36 |
| கடற்பகுதிப் பிரிவு | 285.20 | 807.66 | (522.46) | 65 |
| **செலவினம்** | | | | |
| பயிற்சிப் படி தரைப்பகுதி பிரிவு | 8.85 | - | 8.85 | - |
| நன்கொடைகள் | 1.25 | 0.72 | 0.53 | 74 |
| பயிற்சிக் கல்லூரிச் செலவினம் (தேறியது) | 2.51 | 2.29 | 0.22 | 9 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

குத்தகைப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1.29 மில்லியன் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக வங்கியிடமிருந்து கடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதமொன்று கிடைத்திருக்கவில்லை.

**4.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

| | நிதியாண்டு | | அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|
| | 2016/ 2017 | 2015/ 2016 | % |
| (அ) மொத்த இலாப வீதம் | 11.42% | 29.01% | (17.59) |
| (ஆ) தேறிய இலாப வீதம் | 6.75% | 26.45% | (19.7) |
| (இ) பங்கொன்றின் உழைப்பு விகிதம் | 463 | 823 | (44) |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மொத்த இலாப வீதம், தேறிய இலாப வீதம் மற்றும் பங்கொன்றின் உழைப்பு விகிதம் என்பன முறையே 18 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 44 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தன.

**4.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளில் உள்ளடங்கியுள்ள பாவனையாளர் வைப்புக்கள் தொடர்பில் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையில் ரூபா 124.84 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 96.14 மில்லியன் மீதி மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்த மீதிகளிடையே ரூபா 28.70 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் 2016/2017 இற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 370 நாட்கள் (01 ஆண்டும் 05 நாட்கள்) தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் கம்பனியின் தலைவரது கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
(ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(இ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
(ஈ) இருப்பு மெய்மையாய்வு
(உ) குத்தகை
(ஊ) தலைமை அலுவலகக் கட்டிட நிர்மாணம்